


தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (03.12.2025) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை–2025 முன்னேற்பாடு நடவடிக்கைகள், வெள்ளப் பாதிப்பு கணக்கெடுப்பு மற்றும் பயிர்க் காப்பீடு குறித்து அனைத்து மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல்பாண்டியன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர். முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 03.12.2025 அன்று வழங்கினார்கள். உடன், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### மழை நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட –

# பயிர் மேலாண்மை - பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, டிச. 5 -

வடகிழக்குப் பருவமழை-டித்வா புயல் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்படவேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (03.12.2025) தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்து 01.12.2025 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் வழங்கிய உத்தரவின் படி, வடகிழக்குப் பருவமழை-டித்வா புயல் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்படவேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (03.12.2025) தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை இவ்வாண்டு 16.10.2025 அன்று துவங்கி அனைத்து மாவட்டங்களிலும் பெய்து வருவதுடன், அக்டோபர் மாதம் நிலவிய மோந்தா புயல் மற்றும் தற்போதைய டித்வா புயல் காரணமாக கனமழை மற்றும் அதி கன மழையாக இதுவரை 10 சதவீதம் கூடுதலாக மொத்தம் 401.8 மி.மீ மழை பதிவாகியுள்ளது. தற்போதைய நிலவரப்படி 68,226 எக்டர் பரப்பில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, பாதிக்கப்பட்டுள்ள நெல்வயல்களில் தேங்கியுள்ள வெள்ள நீரை உடனடியாக வடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தினார்.

அதிக அளவில் அடைப்பு ஏற்பட்டு, வெள்ள நீர் தேங்குவதற்குக் காரணமாக உள்ள வாய்க்கால்களைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சியர் மற்றும் தொடர்புடைய நீர்வள ஆதாரத்துறை அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அடைப்பினை நீக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேளாண்மைப் பொறியியல் துறையின் செயற்பொறியாளர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

**பயிர் பாதிப்புக்கு நிவாரணம்!**

மேலும், வேளாண்மை மற்றும் சகோதரத்துறைகளின் மாவட்ட அலுவலர் முதல் கள அலுவலர்கள் வரை அனைவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்து பயிர் சேத நிலைகளுக்கு ஏற்ப விவசாயிகளுக்கு உரிய பயிர் மேலாண்மை ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்றும் உடனடியாக, வருவாய்த் துறையுடன் இணைந்து வயல் ஆய்வு மூலம் 33 சதவீதத்திற்கு மேல் ஏற்பட்டுள்ள பயிர் பாதிப்பைக் கணக்கீடு செய்து டிசம்பர் மாத இறுதிக்குள் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்றும் மாவட்ட அலுவலர்களுக்கு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உத்தரவிட்டார்.

மேலும், நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்பட வேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த பயிர் வாரியான தெளிவான அறிவுரைகளை நேரடியாக விவசாயி களுக்கு வழங்குவதுடன் பல்வேறு சமூக ஊடகங்கள் வாயிலாகவும் விவசாயி களுக்கு தெரிவித்திட வேண்டும் என்றும், பூச்சி, நோய் தாக்குதலைத் தொடர்ந்து கண்காணித்து, பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், இது போன்ற இயற்கை இடற்பாடுகள் நிகழும் நேரங்களில் விவசாயிகளுக்கு துறை அலுவலர்கள் உறுதுணையாக இருந்து அவர்களுக்கு உதவிடவும் கேட்டுக்கொண்டார்.

விதைகள், உரங்கள், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள்தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் சில்லரை விற்பனை நிலையங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்யவேண்டும் என்றும், குறிப்பாக, அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் போதுமான அளவு யூரியா இருப்பு வைக்கப்பட வேண்டும் என்றும், மறு பயிர் செய்வதற்குத் தேவையான விதைகள், பூச்சி, நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பயிர்களைக் காப்பாற்றிட பயிர் பாதுகாப்பு மருந்துகளை இருப்பு வைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட அலுலவர்களுக்கு அறிவுறுத்தினார்.

**பயிர் சேதம் குறித்து ஆய்வு!**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ட்ரோன் மற்றும் செயற்கைக்கோள் புகைப்படங்கள் வாயிலாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர் சேதம் குறித்த ஆய்வு மேற்கொண்டு தொடர்ந்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்றும் வட்டாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வேளாண் விஞ்ஞானிகள் துறை அலுவலர்களுடன் இணைந்து பயிர் வாரியான பொதுவான பயிர் மேலாண்மைக்கான தொழில்நுட்ப அறிவுரைகளை தத்தம் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வழங்கவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், சமுதாய வானொலி (FM - ரெயின்போ வானொலி பண்பலை) மூலம் தொடர்ந்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் அன்றாடம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கிடவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

**பயிர் பாதுகாப்பு நடவடிக்கை!**

வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து டிசம்பர் மாத இறுதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவ்வப்போது ஏற்படும் பயிர் பாதிப்பு நிலவரங்களை வட்டார வேளாண் அலுவர்களுக்குத் தெரிவித்து உரிய ஆலோசனைகளைப் பெற்று பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று விவசாயிகளை வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

மேலும், ஏற்கனவே முதமைச்சர் அவர்கள் 01.12.2025 ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு, அக்டோபர், 2025 மாதத்தில் பெய்த கனமழையால் 33 சதவீதம் மற்றும் அதற்கு மேல் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு நிவாரணம் பெறுவதற்கான கருத்துருவை மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலோடு உரிய படிவத்தில் உடன் அரசுக்கு அனுப்பிட வேண்டும் என்று கள அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ. தட்சிணாமூர்த்தி வேளாண்மைத்துறை இயக்குநர் .பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர்பெ.குமாரவேல் பாண்டியன், வேளாண்மைப் பொறியியல்துறையின் தலைமைப் பொறியாளர் ஆர்.முருகேசன் மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் மற்றும் மாவட்ட அலுவலர்கள் (காணொலியில்) கலந்து கொண்டனர்.

### சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி

# முயல்நகரில் முழு நேர நியாய விலை கடை!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் திறந்து வைத்து – பொருட்களை வழங்கினார்!

சேலம்,டிச.5-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி முயல் நகர் முழு நேர நியாய விலை கடையினை அன்று 30.11.2025 திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :



முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சி பொறுப்பில் இருக்கும்பொழுது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தினை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு தங்குதடையின்றி தரமான நியாய விலை பொருட்கள் கிடைத்திட வழிவகை செய்தார்கள். தற்பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு அனைத்து மக்களும் அணுகி பயன்பெறும் வகையில் இத்துறையில் கூடுதல் கவனத்துடன்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சேலம் மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 1,298 முழுநேரம் மற்றும் 453 பகுதிநேரம் என மொத்தம் 1,751 நியாய விலைக்கடைகள் செயல் பட்டு வருகிறது. கூட்டுறவுத்துறையின் கீழ் 1,739 நியாய விலைக்கடைகளும், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலமாக 12 நியாய விலைக்கடைகளும், மொத்தம் 1,751 நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் 11,11,149 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

கடந்த 4 ஆண்டுகளில் 120 முழுநேரம் மற்றும் 57 பகுதி நேரம் என மொத்தம் 177 நியாய விலைக் கடைகள் புதியதாக திறக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள 470 நியாயவிலைக் கடைகளுக்கு ISO தரச்சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் FSSAI தரச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. அதேபோன்று 99 நகரும் நியாய விலைக் கடைகள் மூலம் 13,742 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் 1,284 பள்ளிகளுக்கு நியாய விலைக்கடைகள் மூலம் சேமியா, கோதுமை, ரவை மற்றும் அரிசிகள் வழங்கப்பட்டு உணவுகள் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 1,10,265 குடும்ப அட்டைதாரர்கள் இல்லங்களுக்கே பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பயன் பெறுவோர் எண்ணிக்கையில் சேலம் மாவட்டம் மாநிலத்தில் முதலாவது இடத்தில் உள்ளது.

இன்றையதினம் நடைபெறும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, மாருதி நகர், முயல் நகர், காந்தி நகர், அசோக் நகர், ஐயப்பன் நகர், டெலிபோன் நகர் மற்றும் கௌரி நகர் சுற்று வட்டாரப் பகுதிகளில் வசித்து வரும் பொதுமக்கள்/ குடும்ப அட்டைதாரர்கள் நலன் கருதி கொண்டப்பநாயக்கன் பட்டி முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து 713 குடும்ப அட்டைகளைப் பிரித்து முயல்நகர் என்ற புதிய முழு நேர நியாய விலைக் கடை செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் 2,267 குடும்ப அட்டை உறுப்பினர்கள் பயனடைவார்கள்.

குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் எப்பொழுதும் மாணவர்கள், பொது மக்கள், விவசாயிகள், நெசவாளர்கள் ஆகியோரின் நலனை கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகின்றார்கள். இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜ்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# 4 வழித்தடங்களுக்கான 6 புதிய BS VI ரக நகரப் பேருந்துகள்!

## பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், டிச.5-

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஒன்றியத்திற்குட்பட்ட குன்னம் பேருந்து நிலையத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 4 வழித்தடங்களுக்கு 6 புதிய BS VI ரக மகளிர் விடியல் பயண நகரப் பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ந.மிருணாளினி தலைமையில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து வாலிகண்டபுரம், தொழுதூர் வழியாக லெப்பைக்குடிக்காடு வரையில் இரண்டு பேருந்துகளும், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து சித்தளி, பேரளி வழியாக குரும்பாபாளையம் வரை ஒரு பேருந்தும், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து செங்குணம் வழியாக பென்னகரம் வரை இரண்டு பேருந்துகளும், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து சிறுவாச்சூர், இலுப்பைக்குடி வழியாக சில்லக்குடி வரை ஒரு பேருந்தும் என மொத்தம் 6 புதிய BS VI ரக நகரப் பேருந்துகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்,மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் குன்னம் சி. ராஜேந்திரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்ட நிர்வாக இயக்குனர் க. தசரதன் ஆலத்தூர் முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி, வேப்பூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சி.இராஜேந்திரன், திருச்சி மண்டல பொது மேலாளர் டி.சதீஷ்குமார் மற்றும் போக்குவரத்து கழக பணியாளர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் நக்கம்பாடி ஊராட்சி, கன்னியம்மன் கோவில் தெருவில் டிட்வா புயல் மழையால் வீடு சேதமடைந்த துரைசாமி பாப்பாத்தி குடும்பத்தினரை மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் நேரில் சந்தித்து கழகத்தின் சார்பில் நிதி உதவி செய்தார். உடன் குத்தாலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஆர்.ராஜா மற்றும் பாலு, சிவக்குமார், ராஜ்குமார், ராஜேஷ்குமார், ஐயப்பன் உள்ளிட்டோர் உள்ளனர்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்ற நினைவில் வாழும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் குளித்தலை சிவராமன் அவர்களின் 84 வது பிறந்தநாளையொட்டி, அவரது இல்லத்தில் திருவுருவப்படத்திற்கு நகரக் கழகச் செயலாளர் இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் குளித்தலை சிவராமன் அவர்களின் துணைவியார் அகிலா சிவராமன், சகுந்தலா பல்லவிராஜா, வே.பல்லவிராஜா, வழக்கறிஞர் சாகுல்அமீது, கே.எம்.செந்தில்குமார், நா.தமிழரசன், கே.பி.அருண்மொழி, பெ.ஆனந்தகுமார், பெ.வினோத், தாளியம்பட்டி ரமேஷ், கந்தசாமி மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.